முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No. 93/2021

தேதி : 19-06-2025

(பி.வா.சா.1) – திரு.இளங்கோவன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. வழக்கு சொத்து பூர்வீக சொத்து என்றால் சரிதான். அதனடிப்படையில் தான் எனக்கும், வாதி, 2ம் பிரதிவாதிக்கும் பாத்தியம் என்றால் 2ம் பிரதிவாதிக்கு பாத்தியம் கிடையாது, எனக்கும், வாதிக்கும் பாத்தியம்தான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நானும், என் சகோதரியும் சுமூகமான உறவில்தான் இருந்தோம் என்ாறல் சரிதான். நானும், 2ம் பிரதிவாதியும் சேர்ந்து கொண்டு வழக்கு சொத்தை விற்க முற்பட்டதால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து 3 பகுதிகள் கொண்ட இடம் என்றால் 2 வீடுகள் மற்றும் மாடி பகுதி உள்ளது. ஒரு வீட்டில் 2ம் பிரதிவாதியும், மற்றொரு வீட்டில் நானும், மேல்தளத்தில் என் தாயாரும் குடியிருந்து வந்தோம் என்றால் சரியல்ல, 2ம் பிரதிவாதி வழக்கு சொத்தில் குடியிருக்கவில்லை. என் தாயார் 2019ல் இறந்தார், அதற்கு பின்னர் ஆக்கிரமிப்பு செய்து 2ம் பிரதிவாதி வீடு கட்டினார். அது சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை, புகார் கொடுத்தேன்.

2. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு புகார் கொடுத்தேனா என்றால் ஞாபகமில்லை, வீடு கட்டும்போது நான் புகார் கொடுத்தேன். வீடு கட்டிய பின்னராவது அவர் மீது வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நானும், 2ம் பிரதிவாதியும் சேர்ந்து கொண்டு வாதிக்கு சேரவேண்டிய பாகத்தை தராமல் மறுத்து வருவதால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. என் தாயாரை வாதிதான் அவருடைய வீட்டில் வைத்து இறக்கும் வரை பார்த்து வந்தார் என்றால் சரிதான். என் தாயாரின் இறப்பிற்கு பின்னர் நடந்த சடங்குகள் அனைத்தும் வழக்கு சொத்தில் தான் நடந்தது என்றால் சரிதான். சாட்சியிடம் ஒரு ஆவணம் காண்பிக்கப்பட்டு அதில்

சாட்சியின் கையெழுத்து உள்ளதா என்று கேட்டபோது அதை ஒப்புக்கொண்டார் (சாட்சி சார்பு ஆய்வாளர், பழனி நகர் காவல்நிலையத்திற்கு அனுப்பிய புகார் ).

3. அந்த புகாரில் வாதி, 2ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்தில் உரிமையிருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், ஆனால் 2ம் பிரதிவாதி மற்றும் போலிசார் அச்சுறுத்தியதன்பேரில் எழுதிக்கொடுத்தேன். சமாதானமாக எழுதிக்கொடுத்துவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி ரூ.1லட்சம் தொகை பெற்றுக்கொண்டு தன்னுடைய உரிமையை விட்டுக்கொடுத்ததாக சொல்லியுள்ளது உண்மையல்ல என்றால் சரியல்ல. என் அப்பா மற்றும் பெரியப்பா அவர்கள் இறக்கும்வரை சொத்துக்களை பாகம் பிரித்து கொள்ளவில்லை என்றால் சரிதான். கூட்டுக்குடும்பமாக தான் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். தற்போது வரை அந்த சொத்துக்களை கூட்டுக்குடும்ப சொத்தாகதான் அனுபவித்து வருகிறோம் என்றால் என் தாய், தந்தை இறக்கும்வரை அப்படிதான் இருந்து வந்தோம். என் பெற்றோர்கள் இறப்பிற்கு பின்னர் வழக்கு சொத்தை விற்க முற்பட்டதால்தான் வாதி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றும், எனவே வழக்கு நிலைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

ஒம். K.ரேணுகாதேவி,<br>
முதன்மை சார்பு நீதிபதி,<br>
பழனி.